குட்டி அங்கிளை நான் முதன் முதலாக பார்த்தது நோர்வே வந்த வருடமான 1986ல் Fana Folkehøyskole இல். அவரின் ஒன்றுவிட்ட அக்காவின் மகனும் (Kumar) அதே வருடம் அந்தப் பாடசாலைக்கு வந்திருந்தார். அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்த அங்கிளை, தற்செயலாக சந்தித்து கதைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அவரின் ஒன்றுவிட்ட அக்காவின் மகனே ஓரிரு வருடங்களின் பின் எனது கணவராகிய போது, எங்களுக்கும் அங்கிள், அன்ரிக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடைந்தது. எங்களின் காதல்/திருமண வாழ்வில் முக்கியமானவர்களாக இவர்கள் இருவரும் இருந்தனர்.

அதன்பின் 1989ம் ஆண்டு பிறந்த எங்கள் மகளுக்கு இவர்கள் இருவருமே தொட்டப்பா, தொட்டம்மாவாக (God parents) இருக்க வேண்டும் என்ற எமது விருப்பத்தை தெரிவித்த போது, மறுப்புத் தெரிவிக்காத போதிலும், "ஏன் வயசு போன எங்களை, எவ்வளவு காலம் இருப்பமோ தெரியாது" என்ற பதில் அங்கிளிடம் இருந்து வந்தாலும் எங்கள் விருப்பமே நிறைவேறியது.

Uncle எம்மை விட்டுப்பிரிந்த போது எங்கள் மகளுக்கு சரியாக ஒரு வயது. அந்த ஒரு வருடத்தில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எங்கள் வீட்டுக்கு வருவார். எப்போதும் பழங்கள் வாங்கி வருவார். Uncle இல்லாது போனாலும் "தொட்டம்மா" என்ற கடமையை இன்று வரை நேர்த்தியாக செய்கின்றார் எங்கள் அன்ரி. அன்ரியோடு எமக்கு இருக்கும் உறவு தொடர்வதிலும் ஆனந்தம் கொள்கின்றோம் நாம்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழிக்கு மிகப் பொருத்தமானவர் நீங்கள் அன்புக்குரிய Uncle. அன்பான, சாந்தமான, எல்லோரையும் மதிக்கின்ற, அதிகம்-பேசாத, பேசினாலும்கூட... நல்ல விடயங்களை, நற்பண்புகளை, முக்கியமாக மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டும் வண்ணம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவை மட்டுமல்ல, "விசுவாசம்" என்ற சொல்லின் அர்த்தத்தை அங்கிளை சந்தித்தவர்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

"புன்னகை" என்ற சொல்லை பெண்களோடு தொடர்பு-படுத்தி பேசுவதையே நான் அதிகம் கேட்டுள்ளேன். ஆனால், உங்கள் உதட்டோரம் உதிரும் அந்த அழகான புன்னகையை நான் எங்கும் கண்டதில்லை. இறுதியாக நான் உங்களைப் பார்த்த போதும் உங்களின் உயிர்தான் உங்களிடம் இல்லையே தவிர, உங்களின் புன்னகை அப்படியேதான் இருந்தது Uncle.

நீங்கள் வாழ்ந்த போது, நாங்களும் வாழ்ந்தோம் என்பதில் பெருமை கொள்கின்றோம். உங்களோடு எமது பயணம் நான்கே நான்கு ஆண்டுகள் என்றாலும், உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை தொடரும்.

நீங்களும், ஆன்ரியும் எங்களுக்கு செய்த அனைத்து உதவிகளுக்கும் "நன்றி" என்ற ஒரு வார்த்தை போதாது. We miss you Uncle.

என்றும் அன்போடு
மதி ரோமர்